266—

மரக் கன்றுகள் நடுதல்

***19952—திரு. எம்.கே. அசோக்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி தொகுதியில் உள்ள வேளச்சேரி, பெருங்குடி மற்றும் தரமணி இரயில் நிலையங்களையொட்டிய சாலையின் இருமருங்கிலும் வனத் துறை மூலமாக மரக் கன்றுகள் நடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதிக்குட்பட்ட வேளச்சேரி இரயில் நிலையம், காந்தி மண்டபம், சாலையோரங்கள், கல்வி நிறுவனங்கள், அலுவலக வளாகங்கள் போன்ற 13 இடங்களில் மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பிறந்த நாளையொட்டி அறிவிக்கப்பட்ட மாபெரும் மரம் நடும் திட்டத்தின்கீழ் பூவரசு, புங்கன், மகாகனி, மகிழம், தபிபியா, இயல்வாகை போன்ற 1,210 மரக் கன்றுகள் நடவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட மற்ற சாலைகளில் சம்பந்தப்பட்ட மற்ற துறைகளைக் கலந்தாலோசித்து மரக் கன்றுகள் நடுவதற்கு வனத் துறை தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.*

திரு. எம்.கே. அசோக்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடிய பயிருக்கு வாழ்வளிக்க வந்த மழையாக, தமிழகத்திற்கு இடைவிடாத மின்சாரம் தந்துகொண்டிருக்கும்*

2014 ஜூலை 25]

தங்கத் தாரகையாக, காவேரியை மீட்டுத் தந்த காவியத் தலைவியாக (மேசையைத் தட்டும் ஒலி) மடிக் கணினி தந்து மாணவர்களுக்கு மகுடம் சூடவைத்த தாயாக, தாலிக்குத் தங்கம் தந்து தாய்க்குத் தாயாக, ஏழைகளின் பசி போக்க மலிவு விலை உணவு தந்து மாதரசியாக விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரி பறக்கும் இரயில் நிலையத்தின் மேல் சுமார் 40 கோடி ரூபாய் செலவில் 1,11,000 சதுர அடி பரப்பில் இரண்டு தளம் கொண்ட அலுவலக வளாகம் அமைக்க ஆணையிட்ட மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று இந்தப் பகுதிகளில் மரக் கன்றுகள் நடுவேன் என்பதை அறிவித்த அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றியைக் கூறி அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 267, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

267—

சுற்றுச்சூழல் பாதிப்பு

***44568—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மின்னணுக் கழிவுகளால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதைத் தடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனிதப் பாதங்களை வணங்குகிறேன். தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.